தமிழ்நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1974 சனவரி 19.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

திருப்பூர் மருத்துவ மனைக் கட்டடம்

***வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் 120 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனை கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) திருப்பூரில் 120 படுக்கை வசதிகொண்ட மருத்துவமனை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்தது. ஆனால் அதனை 100 படுக்கை வசதிகொண்ட மருத்துவமனையாகக் கட்ட அரசு 28—11—1973-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, திருப்பூரில் மருத்துவ மனை கட்டும் வேலை எப்பொழுது தொடங்கும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனை 18 இலட்ச ரூபாயில் கட்டப்பட வேண்டுமென்றும், ஐந்து இலட்ச ரூபாய் திருப்பூர் நகர மக்கள் நன்கொடை தருவது போக, மீதம் 13 இலட்ச ரூபாய் அரசு ஒதுக்க வேண்டும் என்றும்

தீர்மானிக்கப்பட்டு, விரைவாகச் செயல்படவேண்டுமென்ற அடிப்படையில் 28—11—1973-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அது தொடர்பான நடவடிக்கை இப்பொழுது அரசால் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

மனநோய் மருத்துவ தனிப்பிரிவுகள்

*2 வினா—**திரு. கே. என். குமாரசாமி**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லா மாவட்ட ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவசாலை களிலும் Psychiatric clinic இருக்கின்றனவா ?

(இ) இல்லை எனில், அப்படிப்பட்ட clinics அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) எல்லா மாவட்டங் களிலும் ஏற்படுத்தப்படவில்லை. தற்பொழுது சேலம், கடலூர், திருச்சிராப்பள்ளி மாவட்ட மருத்துவ மனைகளில் மனநோய் மருத்துவ தனிப்பிரிவுகள் உள்ளன. நாகப்பட்டினம், திண்டுக்கல் மாவட்ட மருத்துவமனைகளின் மனநோய் மருத்துவ தனிப் பிரிவுகள் ஏற்படுத்த செப்டம்பர் 1973-ல் அரசு ஆணை பிறப்பித் துள்ளது.

(இ) எல்லா மாவட்டங்களிலும் உடனடியாக அமைக்க செயற்குறிப்பு இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, மன நோய் மருத்துவத் துறையில் சிறந்த முறையில் பணியாற்றக்கூடிய சில டாக்டர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக, மதுரையில் டாக்டர் வெங்கோப ராவ் போன்றவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் களுக்கு விசேஷ சலுகை கொடுத்து அவர்களுடைய சேவையைப் பயன்படுத்திக்கொள்ள அரசு ஏதாவது ஏற்பாடு செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட டாக்டரைக் குறித்து எனக்குத் தனியாக விவரம் எதும் தெரியாது. ஆனால், இங்கே குறிப்பிட்ட இந்த இரண்டு மூன்று மாவட்ட மருத்துவ மனைகளில் மனநோய் மருத்துவத் தனிப்பிரிவுகள் உள்ளன. மற்ற